உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்.

தில்லைவளாகம் என்கிற
ஆதி சிதம்பர மான்மியம்.

இரண்டாம் பதிப்பு

1938.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைவனாகம் என்கிற
ஆதி சிதம்பர மான்மியம்.

காரைக்குடி க. முத்துப்பட்டணம்.

திருமிகு

பெரி. நா. நா. வகை

மெ. கண்ணப்ப செட்டியார்

அவர்களால்

காரைக்குடி செட்டிநாடு பிரஸில்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

வெகுதானிய ஸ்ரீ ஆடிமீ

1938

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.



தோற்றந் துடியதனில் தோயுந் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

(படைத்தல். காத்தல். அழித்தல். மறைத்தல். அருளல்)

தில்லைவளாகம் நடராஜமூர்த்தி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிறப்புப் பாயிரம்.

சிவநேசச் செல்வர்,

சேவு. மெ. மெய்யப்ப செட்டியார்.

தில்லைவளாகம் (ஆதி சிதம்பரம்) என்னும் திருத்தலம் மிக மிகப் பெருமை வாய்ந்ததும் மிகப் புராதன க்ஷேத்திரமாகவு முள்ளது. இத்திருத்தலத்திற்கு அங்கை நெல்லிபோல் நன்கு விளங்குமாறு சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் என்னுமுறை பற்றி காரைக்குடி உயர்திரு. சித்தாந்தச் செல்வரும் உத்தம சிவபூஜாதுரந்தரரும் தனவணிகப் பெரியாரும் எனது குருநாதருமாகிய ஸ்ரீலஸ்ரீ. ராம. சொ. சொக்கலிங்க ஐயா அவர்களால் ஸ்தலபுராணத்தையொட்டி தெளிந்த முறையில் எழுதப் பெற்றுளது. அவற்றின் சாரமானது தலப்பெருமையை நன்கு விளக்குகிறது.

இத்திருத்தலம் உலகம் தோன்றுவதற்கு முதற் காரணமாக உளது. இத்திருத்தலத்திலேயே உலக உற்பத்திக்கு ஏதுவாக உள்ள படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐம்பெரும் செயலை நடாத்தும் (பஞ்சகிருத்திய தாண்டவத்தை) உலகமுதல்வ

ளுகிய சிவபெருமான் சக்தியாகிற சிவகாம சௌந்தரியாருடன் செய்தருளினர். அவருடைய நடனத்தாலேயே உலகம் நடைபெறுகிறது. "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" என்றார் தேவாரத்தில் நம் திருநாவுக்கரசர் பெருமானும். மேலும் 'அவனசையாமல் அணுவசையாது' என்பது பழமொழி. இத்தகைய திருவாக்கின் விளக்கமே ஸ்ரீநடராஜ மூர்த்தியின் உண்மைத் தத்துவ லக்ஷணமாகும்.

"தோற்றம் துடி அதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றி இடு மங்கியிலே சங்காரம்
ஊன்று மலர்ப் பதத்தே உற்ற திரோத முத்தி
நான்ற மலர்ப் பதத்தே நாடு."

என்றார் பாவலரும். இவ்விளக்கம் மானமியத்தில் மிகக் குறிப்பிடத்தக்கதாகும்.

2. ஸ்ரீ ராமபிரான் ராவணசம்ஹாரத்திற்கு முன்னும் பின்னும் வழி பட்டு இராவணனைக் கொன்ற ப்ரமஹத்தி தோஷம் நீங்கக் கருதி நடராஜராஜவள்ளலாரைப் பக்தி சிரத்தையுடன் வழிபட்டு உய்ந்து தோத்தரித்து பலப் பிராப்திகளெல்லாம் பெற்று ஸ்ரீ வைகுண்டத்தைவிட அதிப் ப்ரீதியாக ஸ்ரீ சீதா சமேதராய் கோவில் கொண்டருளும் பெருமை மிக்கது. இத்தலத்தில் சீதாலக்ஷ்மணருடன் ஸ்ரீ ராமபிரானின் அழகிய திரு விக்கிரகமும் அவருக்குத் தனித்திருக்கோவிலும் மிகச் சிறப்பாக அமைந்திருக்கிறது. இப்பெருமை பிரமாணச் சிறப்பாகும். மேலும் பல முனிவர்களும், தேவர்களும், மனிதர்களும் நடராஜ ராஜ மூர்த்தியைக் கண்களிப்பக்கண்டு வழிபாடு செய்துவந்த திருத்தலமாகும்.

ஏனைய திருத்தலங்களிலுள்ள நடராஜமூர்த்திகளைவிட இத்தலத்தில் உள்ள மூர்த்தியானவர் கண் கவர் காக்ஷியாக விளங்கும் பொலிவு காணத்தக்கதாகும்.

இத்தலபுராணத்துடன் ஸ்ரீலஸ்ரீ சொக்கலிங்க ஐயா அவர்கள் திருவாக்காக அமைந்துள்ள நடராஜர் பதிகமும் உயர்ந்த சாஸ்திரக்கருத்துகளுடன் அன்பு கனிந்த பக்தி ரச மிக்க பாடலாக விளங்குகின்றது. நித்திய பாராயணம் செய்தற்குரிய போற்றதக்கதாகும்.

இப்பெருமை பொருந்திய திருத்தலத்தில் விளங்கும் திருக்கோவிலை, தென்பாண்டி நாட்டில் தனவணிக நாட்டின் திலகமாக விளங்கும் காரைக்குடி க. முத்துப்பட்டணம் உயர்திரு. பெரி. நா. நா. குடும்பத்தார் நன் முயற்சியாலும் அவர்களின் பெரும் பொருளாலும் சொந்த முறையில் மிக அழகாகத் திருப்பணி செய்யப்பெற்றிருக்கின்றது.

மேற்படி திருக்கோவில் நித்திய பூஜை திருவிழாக்களை தற்சமயம் மேற்படி உயர்திரு. பெரி. நா. நா. குடும்பத்தார்களில் பெரி. நா. நா. மெ. கண்ணப்ப செட்டியாரவர்கள் பக்திசிரத்தையுடன் கவனித்து வருகிறார்கள். மேற்படி தலத்தில் நந்தனவனம், பசுமடம் தங்குவதற்கு விடுதி, முதலிய எல்லா வசதிகளும் செய்திருக்கிறார்கள்.

இத்திருத்தலம் S. I. Ry. லயனில் அறந்தாங்கியிலிருந்து திருத்துறைப்பூண்டி செல்லும்போது, திருத்துறைப்பூண்டிக்கு முன் தில்லைவளாகம் என்னும் பெயருடன் விளங்குகிறது. இத்தலத்தில் வசிப்பதற்கும் உலக

முதல்வனுகிய ஸ்ரீ நடராஜமூர்த்தியையும் ஸ்ரீ ராமபிரானையும் இருகண்களாலும் கண்களிப்பக்கண்டு தரிசிப்பதற்கும் மிகப் பொருத்தமான புண்ணிய க்ஷேத்திரமாகும். இத் திருத்தலத்தைப் பிரகாசிக்கச்செய்த சிவ புண்ணியச் செல்வர் முதலாக உள்ள பெரி. நா. நா. குடும்பத்தாரும் தரிசித்துத் தொண்டு புரிந்து வாழ்கின்ற பக்தர்களும் ஸ்ரீ சிவகாம சௌந்தர்யை கண்டின்புறத் திருநடம் புரியும் ஸ்ரீ நடராஜ ராஜவள்ளலாரின் பெருங் கருணைக்குப் பாத்திரராகி இஷ்டகாமியாதிகளைப் பெற்றுவாழப் பிரார்த்திப்போமாக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைவளாகம் என்கிற
ஆதி சிதம்பர மான்மியம்.

—(○)—

விநாயகர் துதி.

சீரேறு பிரணவகுஞ் சரமாகிச் சிவக்கொழுந்து செல்வான் கண்டு
நாரேறு சிவையாங்கப் பிடியாகி மருவவரு கால்வா யன்பர்
சூரேறு மஞர்தொலைத்துச் சுதையேறு மருப்பேந்தித் தொல்லைஞால
மேரேறு மாதில்லை வளாகமே ரேரம்ப னிணைத்தாள் போற்றி.

நல்லவருட் டலைமையுறு மிராமனுஞ்சீதையு நடனவிராசாவுந்த
னில்லவளாந் தன்றாயுமிம்பர் வெளிவந்தருள வெண்ணியெந்தாய்
தில்லைவளாகம் மாதிசிதம்பரம் யாமுன்போலச் செல்வோ மென்னுஞ்
சொல்லினமு தெழுந்தாற் போலெழுந் தவரோடெழுந் துதிகைச்
[சுமுகாபோற்றி.

சிதம்பரேசுவரர் துதி.

பொன்மானுஞ் சொன்மானுங் கண்மைபெற வலைஞ்சம்
புசித்தொண் கண்டத்
தன்மானும் படிவைத்திட் டுமைகண்ணே யொண்மானும்
மங்கை யேந்திச்
சென்மானுங் குழன்மலைமா னுலகுயிர்க ளுய்ந்திடுமா
சேவை கொள்ளத்
தன்மானு நடநவிலு மாதிசிதம் பரப்பெருமான்
றாள்கள் போற்றி.

இராமர் துதி.

அத்திரமொன் றெய்துதச முகனுர்த முயிர்கவர்த
லாதியானே
ரத்திபல பலதளிகள் சென்றுகழித் தெஞ்ஞான்று
மமர்வான் வேண்டிப்
பத்திரச மலிந்தொழுக வாதிசிதம் பரநாதற்
பரவி வைகும்
பத்திரதன் றருமதலை பதுமமலர் புரையுமடி
பணிந்து வாழ்வாம்.

உ

சிவமயம்.

தில்லைவளாகம்

நடேசர் பதிகம்.

பூமகனு மாதவனு மறைக ணான்கும் புணர்வரிய
நிலைநின்றும் போந்திட்டன்பர்
தாமெளிதி னிருவிழியார் பெறுபேறிந்தத் தனியுருவின்
றரிசனமே தகுமீதன்றோ
கோமகலின் பெனக்களிப்பக்கோ மகளாங்க சுந்தரப்பே
ரருளுருவாய்ப் புவியிற்றோன்றி
நாமருசீர்த் தில்லைவளா கத்தின் மேவு நடராசன்
திருவடிக ணமந்து வாழ்வாம். (1)

தேவரெலா மெம்முலகென் பெறுமாலிந்தத் திவ்விய
தேசோமயமாய்த் திகழாநின்ற
பாவனமா ரூபதர னமர்ந்து வாழப் பயிறவஞ்செய்
வியனகரிப்பதியே யன்றோ!
தாவரிய தத்துவா தீதமாய தனிநகரென்
றனவரதஞ் சார்ந்து போற்று
நாவலர்சீர்த் தில்லைவளாகத்தின் மேவு நடராசன்
திருவடிக ணமந்து வாழ்வாம். (2)

ஆரணமே தில்லைவளா கந்தா னுரு மதன்முடியா
முபநிடத மதன்கண் மேய
சீரணவுஞ் சிற்சபையா மதனின் மேன்மைச் சிவாகமத்தின்
றெளிபொருளே திரண்டதிந்த
வேரணவுந் திருவுருவென் றடைந்துகண்டோ ரெய்தரிய
மகிழ்ச்சியொடு மிறைஞ்சியேத்த
நாரணவுந் தில்லைவளா கத்தின் மேவு நடராசன்
திருவடிக ளமர்ந்து வாழ்வாம். (3)

கற்பகமோ முக்கனியோ தெளிசெந் தேனே கற்கண்டோ
சர்க்கரையோ கருப்பஞ்சாறோ
வற்புதமோ பொற்பதமோ வமிழ்தந்தானே
வானந்தா தீதமோ வருட்பெருக்கோ
தற்பதமோ சிற்பதமோ வனந்த பானுத் தனியுருவோ
வெனமுனிவர் சார்ந்துபோற்ற
நற்பதமார் தில்லைவளா கத்தின் மேவு நடராசன்
திருவடிக ளமர்ந்து வாழ்வாம். (4)

குலமறையுந் தொடர்வரிதா யகண்டமாகிக்
குறிக்கவருநெறிக்கயலாய்க் கோதிலாத
நிலைமையுறு மரும்பொருளே நீயிப்பாரி னிலமகளுந்
தொழிலினரு நேர்ந்து காணுந்
தலைமையுற வெளிதுவெளி வந்ததென்னே சாற்றுகென
வமரரெலாஞ் சார்ந்துபோற்ற
நலமிகுசீர்த் தில்லைவளாகத்தின் மேவு நடராசன்
திருவடிக ளமர்ந்து வாழ்வாம். (5)

குன்றிருநான் கிருபாலி னிரைய வாகக் கொண்டனைய
வெண்டோளான் குணமெட்டுள்ளான்
வென்றிதரு மால்விடையா னுடைபுன்றேலான் வேணிமதி
பாணிபுனை விமலன் செம்பொன்
மன்றினடங் குயிற்றுறுகுஞ் சிதப்பொற் றுளான்
மாதேவனென் றெவரும் வழுத்தி யேத்த
நன்றிதரு தில்லைவளா கத்தின் மேவுநடராசன்
திருவடிக ணமந்துவாழ்வாம். (6)

இமயமலை யுதவுசுதை யுலகமாதா விலங்கு சிவகாமி
யென்று மிடப்பான் மேவி
யமையவரு மானந்தநிறை கடலின் மூழ்கியாருயிர்கள்
பவரோக மகன்றின் பாரக்
கமைவுறநேர் காணவருட் டொழிலைந்தாய கவின்கொடிரு
நடம்புரியுங் கமல பாத
னமையருளுந் தில்லைவளா கத்தின் மேவுநடராசன்
திருவடிக ணமந்து வாழ்வாம். (7)

ஆதரமோர் சிறிதுமிலே னன்பிலாதே னழுக்காறு
வஞ்சமுத லனைத்துமுள்ளேன்
காதரமா பாதகன்வெவ் வினையன் றீயேன் கடியகுணக்
களஞ்சியமே கடுக்க நின்றே
னுதவிஞ லுறுதுணையொன் றில்லை யெந்தா யளித்தியென
வழுத்துமெனக் கருளுமேலோ
னுதகுசீர்த் தில்லைவளாகத்தின் மேவு நடராசன்
திருவடிக ணமந்து வாழ்வாம். (8)

அல்லாரு மிடற்றானே யுமையோர் பாகா வருட்கடலே
யிருட்கடலினமிழ்ந்து நாயேன்
கல்லாதேன் பொல்லாதேன் கருத்தொன் றில்லேன்
கண்ணுதலே யென்னுதனின் கடனென் றேத்த
வில்லாரு நெறியருளிச் செல்லார் சோலை விண்முகட்டை
யூடுருவி மேற்சென் றோங்கு
நல்லார்சூழ் தில்லைவளா கத்தின் மேவு நடராசன்
திருவடிக ளமர்ந்து வாழ்வாம். (9)

கவினிலகு மணிமிடற்றான் கைக்கொள் சூலி கனமிலகுந்
திருச்சடையான் கருணை வாரி
சிவைமகிழுந் திருநடஞ்செய் செம்பொற்பாத
திவ்ய குஞ்சித மலரைச் செங்கைக்காட்டி
யவரவருக் கருளுநிலை தெரிக்கு மேலோ னகிலமெலா
முட்புறம்பி னமைந்து நின்று
நவையறுசீர்த் தில்லைவளாகத்தின் மேவு நடராசன்
திருவடிக ளமர்ந்து வாழ்வாம். (10)

ஸ்ரீ நடராஜப்பெருமான் திருவடி வாழ்க.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைவளாகம் என்கிற

ஆதி சிதம்பர விளக்கம்.

(இது பிரமாண்டபுராணம் க்ஷேத்திரவைபவ கண்டத்துட் பிரம நாரதசம்வாதத்திலுள்ள ஐந்து அத்தியாயங்களைச்சுருக்கி மொழி பெயர்க்கப்பெற்றது.)

நூல்.

காசிக்ஷேத்திரத்திலே அசுவமேத மண்டபத்திலே சிவபுராண படனராயிருக்கிற சூதமுனிவரைச் சௌனகாதி முனிவர்கள் வணங்கி, "முனிசிரேஷ்டரே! தங்கள் திருவாக்கிற் பெருகிவருகின்ற சிவசரித்திராமிர்தமே அடிக்கடி பருகிவருகின்றோம். ஆயினும், அது தெவிட்டவில்லை. ஆதலால் இன்னும் சித்திமுத்திப் பிரதமாகவும், சம்சாரதுக்க நிவர்த்திகரமாகவும் சாம்பசிவப்பிரீதிகரமாகவுமுள்ள சிவக்ஷேத்திரமகிமை கேட்க விரும்புகின்றோ"மென்று பிரார்த்தித்தார்கள். அது கேட்ட சூதமுனிவர் சாம்ப பரமேசுவரரையும் வியாசகுருவையும் தியானித்து அவர்களை நோக்கிச் சொல்லுகின்றார்.

"முனிவர்களே! முன்னொருகாலத்திலே நாரதரானவர் பிரமதேவரை வணங்கி, "ஐய! என் தவம் இடையூறின்றி நிறைவேறுதற்குரிய உத்தமோத்தம சிவஸ்தலமின்னதென்று சொல்லியருள்க" வென்று விண்ணப்பிக்க அவரை நோக்கிப் பிரமதேவர், "நாரதமுனிவனே! தக்ஷணபூமியிலே வில்வவனமென்னும் திருத்துறைபூண்டிக்குத் தென்மேற்கிலும், இடும்பாவனத்திற்கு மேற்கிலும் தில்லைவனமெனும் ஒரு சிவக்ஷேத்திரமுளது. இது தன்னையடைந்தார்க்கு அதி சீக்கிரத்திலே புத்தி முத்திகளைத் தருவது. அகஸ்தியர் முதலியோராற் பூசிக்கப்பெற்றது. அநேக சித்தர் முனிவர்களாற் சேவிக்கப்பெற்றது. புண்டரீகபுரமென்றும் ஆதிசிதம்பரமென்றும் பேர்பெற்று விளங்குகின்றது".

"உபநயனானந்தரம் தீர்த்தயாத்திரை சென்ற ஸ்ரீராமர் இத்தலத்தையடைந்து நடேசப்பெருமானைத் தரிசிக்கப்பெற்று பூசித்துக்கொண்டிருந்து மற்றைத் தலங்களினும் அத்தலத்தில் தமக்குக் கிடைத்த நடேசப்பெருமான் திருவருள் விளக்க விசேடத்தாற் பிரிவாற்றாதவராய் நெடுங்காலம் வசித்துப் பின்பு வசிஷ்டோபதேசமும் பெற்று நிர்மலாந்தக்கரணராயினர். இத்தலம் ஸ்ரீராமருக்கு அநவரதவாசப் பிரீதிகரமாகவும், யோகிகளுக்கு ஆனந்தகரமாகவும் முமுக்ஷுக்களுக்குச் சதாசேவியமாகவுமிருக்கின்றதனால், இதற்குச்சமானமான ஸ்தலம் எங்குமில்லை. இத்தலத்திலடைகிற யாவர்க்கும் இஷ்டகாமியங்களும் பரமுத்தியும் மற்றைத் தலங்களிற்போலக் காலக்கிரமத்தன்றி அதிசீக்கிரத்தில் நிச்சயமாகக் கிடைக்கும். நாரதனே! நான் சொல்லித் தெரியவேண்டியதில்லை. நீயே

அனுபவத்தில் தெரிந்துகொள்வாயாக" என்ற பிரமதேவரை நோக்கி நாரதர் கேட்கின்றார்.

"சுவாமின்! இத்தலத்திற்கு ஆதிசிதம்பரமென்னும் நாமங்கூறினீர்கள். அதன் வரலாறு அறியவிரும்புகிறேன் என்றார். அது கேட்ட பிரமதேவர்", நாரதனே! பூமியிலே சிதம்பரசபாபதி க்ஷேத்திரம் ஆச்சரியகரமாகவும் மகா பாதகநாசனமாகவும் முள்ளது. அது பஞ்சப்பிரமரூபமாய் ஐந்துபிரிவாயிருக்கின்றது. அந்த ஐந்தனுள்ளும் இத்தில்லை வளாகம் ஆதிக்ஷேத்திரமானது. நடேசப்பெருமான் மற்றைத் தலங்களிற் செய்யும் நடனங்களுக்கெல்லாம் முன்னர் சிருஷ்டியாரம்பிக்கும்போதே இத்தலத்தில் நடனஞ் செய்தே, ஆரம்பித்தபடியால் ஆதிசிதம்பரமென்னும் பெயர் பெற்று விளங்குகின்றது. காசிக்ஷேத்திரத்திற் பரமசிவன் உலகமெல்லாவற்றையும் ஒடுக்கும் சங்கார காலத்தில் நடனஞ் செய்தருளுவர். சிதம்பரத்திற் பதஞ்சலி வியாக்கிரபாதர்க்காக நடனஞ்செய்தருளினர். உமாதேவியின் திவ்ய ரூபத்திலுள்ள பஞ்சகோசங்களுள் உத்தரகோசரூபமாகிய உத்தரகோசமங்கையும், சுஸ்திரபுரியும் பரமசிவனுக்குப் பிரீதிகரமான நடனஸ்தானங்கள். இவ்வைந்து தலங்களும் பரமசிவப்பிரீதிகர நடனஸ்தலங்களென்று பிரசித்திபெற்றன. இவற்றுள்ளே பரமசிவனுக்கு அதிப்பிரீதிகரமானது தில்லைவளாகம். பரமசிவ நடனஸ்தலங்கள் யாவும் சிதம்பரமேயாகும். அவற்றிற்கெல்லாம் ஆதி சிதம்பர மகிமை மென்பது சொல்லவும் வேண்டுமோ? சர்வ ஜீவ பந்த நிவாரண மோக்ஷதாதாவாகிய பரமசிவன் எங்கெங்கே நடனஞ் செய்கின்றாரோ அங்கங்கேயடைந்த

தாவரங்களாகிய விருக்ஷாதிகளையும், ஜெனனசாகரத்தினின்றுங் கடப்பிக்கின்றார். அத்தலங்களுக்குள்ளே இத்தில்லைவளாகம் தன்னையடைந்தமாத்திரத்திலே எந்தச் சீவர்களுக்கும் ஆத்மஞானத்தை யுடனே கொடுப்பதாலும் முதன்மைபெற்று விளங்குகின்றது என்ற பிரமதேவரை நோக்கி நாரதர் மேலுங்கேட்கின்றார்.

நடேசப்பெருமானுக்கு எக்காரணத்தால் நடனம் ஏற்பட்டது? அந்நடன தாற்பரியம் யாது? இவற்றை விளக்கியருள்கவென்ற நாரதரை நோக்கிப் பிரமதேவர் நீ கேட்ட இரண்டும் அதிரகசியமாயினும் நீ கொண்ட அதிப்பிரிய பக்தி சிரத்தை நோக்கிக்கூறுகின்றேமெனக் சொல்லத்தொடங்குகின்றார்.

நாரதனே! தோன்றிய முறையே எல்லாவற்றையும் ஒடுக்குகின்ற கல்பாந்தத்திலே பராகாசமொன்றே மிஞ்சுகின்றது. அக்காலத்தில் மாயையானது புருஷவிருத்தி சுழுத்தியிலடங்கி நிற்பதுபோலப் பரதத்துவத்தி லடங்கிநிற்கும் அப்போது பரமாத்மா நிர்விகல்பராயிருக்கின்றார். அப்போது சப்தப்பிரவிர்த்திக்கு இடமின்மையால் சப்தங்கள் பரமாத்மாவினிடத்திற் செல்லுவதில்லை. ஆதலால், "யதோவாசோ நிவர்த்தந்தே அப்பிராப்ய மனஸாஸஹ" என்ற சுருதியானது அக்காலத்திலும் அவாங்மனஸகோசரனான பரமாத்மாவையே போதிக்கின்றது. அந்த நிர்க்குண நிஷ்கள உபசாந்த சச்சிதானந்த பரமாத்மா கிருதகாதின்னியம் போலச் சகுணநாமரூபாத்மகனான காலத்தும் அளவுபடானாதலால் சத்திகாரிய விகல்பங்கள் நோக்கி அவ்வேதங்களா

னும் சொரூபநிச்சயம் அளவிட்டுச் சொல்லமுடியாது. ஆனாலும் வேதம் "நைவவாசா நமனஸா" என்று அவனைக் கூறுகின்றதே என்றால் அது சாகாசந்திர நியாயத்தாற் பொருந்தும்.

இத்தன்மைய பரமாத்மாவான பரமசிவனுக்கு ஆத்மோபகார சிருஷ்டியில் விருப்பமுண்டாயது. அவ்விருப்பம் நிருபாதிகமா யுள்ளது. இப்பரமசிவசக்திக ளனேகம். அவை அத்யுத்கிருஷ்டங்களாய் நானாவிதங்களா யுள்ளன. சிவனுடைய சுவேச்சாரூபியே சிவகாமசுந்தரி. நிர்விகல்ப பரமசிவனிடத்தில் எப்போது சுயேச்சையாற் பிரவிர்த்தி யுண்டாயதோ அப்போது அவனிடத்திற் சலனமுண்டாகும். அச்சலனமே சிருஷ்டியாதி பஞ்சகிருத்திய தாண்டவ மென்று சொல்லப்படும். ஈண்டுச் சலனமென்றது சுவேச்சையையே என்க.

இந்த முறையில் நடேசப்பெருமான் செய்யும் சிருஷ்டியாரம்ப நடனஸ்தானமாகலின் இத்தில்லைவளாகம் மேற்கூறிய ஐந்துதலங்களுள் ஆதிசிதம்பரமென்று கூறப்பெறுகின்றது. ஏனைய சிதம்பராதி தலங்களிற் செய்யும் நடனங்கள் மோக்ஷப்பிரதமான உபதேசார்த்தமாக ஏற்பட்டன. பரமசிவம் பக்தபராதீனராதலின் ஆங்காங்குள்ள பக்தர்களுக்கு அநுக்கிரகிக்கு நிமித்தமே பலதலங்களில் அந்த நடனத்தைச் செய்தருள்கிறார். அந்த மோக்ஷம் வாக்குக்கடங்காததனால் அந்நடனம் அபிநயாதியால் உபதேசமாக விளக்கி அவ்விளக்கத்தினால் மோக்ஷத்தைக் கிடைப்பிக்கும்.

அஃதாவது, நடேசப்பெருமான் ஒரு திருக்கரத்தால் டமருக வாத்தியகோஷஞ் செய்து சீவர்களை முத்தி தருகின்றோம் வருதிரென்றழைத்து அங்ஙனம், வந்தவர்களுக்கு ஒரு திருக்கரத்தால் அபயங்கொடுத்து, ஒரு திருவடியைத் தூக்கி யொருதிருக்கரத்தால் அநுக்கிரகமாகிய மோக்ஷஸ்தானமிது வென்று காட்டி இவையாவுஞ் சத்தியமே யென்று தெரிவிக்க ஒருதிருக்கரத்தால் அக்கினியை தாங்கி மௌனியா யுபதேசிக்கிறார். இவை எல்லாம் தரிசனமாத்திரமே இத்தரிசனத்தான் முத்தி சித்திப்பதெப்படியெனில், தரிசிக்கிறவனுடைய மனோவிருத்தி நேத்ரேந்திரிய விருத்தியுடன் அபேதமாகி லயிக்கிறது. மனோலயமாகவே பரஞ்சோதியே மிஞ்சுகிறது. அப்போது சீவபோத நசித்து சிவசொரூபதாத்மியமேயாகிறது. இங்ஙனம் தாத்மியமானவன் எவ்விடத்தினின்று வேறொன்றையும் பார்க்கவில்லையோ அதுவே சுருதியநுபவம். இவ்விதமே சபாபதி நடனம் முத்தி கொடுக்கிறதென்றறிக.

நாரதனே! முன் இத்தலத்து வந்து ஸ்ரீமந்நடேசதரிசனாநந்த வாழ்வு பெற்றுச் சென்ற இராமர் பின்பு பிதுர்வாக்கிய சிரோபூஷணராய் வனத்திற் சென்று சீதாபகாரியான இராவண சங்கார நிமித்தம் அகஸ்தியோபதேசம் அதன் வாயிலாகத் பரமசிவவரப் பிரசாதமும், பெற்று இலங்கை புகுந்து இராவண சங்காரஞ்செய்து தர்மபத்தினியாகிய சீதாதேவியை மீட்டு வந்து பிரமகுலோற்பவனும் சிவபக்தாக்ரேசனுமாகிய இராவணனைக் கொன்றதனால் நேர்ந்த பிரம்மஹத்தியை அத்தனுக்கோடி தடத்திலேயே இராமலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசித்து நீக்கிக்கொண்டு

பின்பு வேதாரணியஞ் சென்று அங்குள்ள உருத்திரகோடியாதி தீர்த்த ஸ்நானஞ்செய்து விரஹத்திமோசன விக்னேசுவரபூஜையால் வீரஹத்தியை நீக்கிக்கொண்டு வேதாரணியேசரையும் பூசித்துத் துதித்திப் பிரியாவிடை பெற்று வந்து தில்லைவளாகத்தில் ஸ்ரீமந் நடேசப்பெருமானைத் தரிசிக்கப்பெற்றுத் தொன்றுதொட்டுறைத்து நின்று இடையறாது வளர்ந்து வரும் அன்பின் மிகுதியால் அத்தியந்த பரவசராய்த் திருமுன் நின்று துதிப்பாராயினர்.

தில்வவனேசாய நம:	ஈசாய நம:
ஆதிசிதம்பரேசாய நம:	பிராணிபாவ நாசினே நம:
சிற்சபேசாய நம:	பார்வதிபதயே நம:
சிருஷ்டியாதி தாண்டவாய நம:	சூலபாணனே நம:
	காலகாலாய நம:
வேதாந்த வேத்தியாய நம:	காலாதீதாய நம:
சித்தாந்தப் பிரகாசாய நம:	சம்பவே நம:
பக்தமுத்திப் பிரதாய நம:	கபாலமாலாபூஷணாய நம:
பிரணதார்த்தஹராய நம:	காருண்யாமிர்தசிந்தவே நம:

என்பனவாதிகளாற் றுதித்து, சுவாமின்! அடியேனைத் தங்கள் பக்தனென்று கிருபைகூர்ந்து தங்கள் சரணாரவிந்தங்களை அடியேன் இருதயத்தில் தாபித்தருளி அடியேனுக்குத் தங்கள் சொரூபத்தைக் காட்டியருளவேண்டுமென்று பிரார்த்தித்தார். அதுகேட்டு மிகமகிழ்ந்து ஆதிசிதம்பரேசர் உமாசமேதராய்ப் பிரத்யக்ஷராயெழுந்தருளி வந்து அம்பிகையைப் பார்த்து, தேவி! உன் அம்சபூதனை விஷ்ணுவே இராக்ஷத பீடாநிவிர்த்தியர்த்தம் இந்த இராம

ஞக அவதரித்திருக்கிறுன் என்று சொல்லிவிட்டுப் பின்பு இராமரைப் பார்த்தருளி, ஏ இராமச்சந்திரா! உனது துதிக்குமிக மகிழ்ந்தோம். பிரமஹத்தி வீரஹத்தியாதி தோஷங்கள் இலேசமும் உன்னிடத்தில்லை. நீ எங்கள் அம்சத்தால் தோன்றினவனே. அதனை உன் நாமார்த்தமே விளக்கும். உனது நாமத்தை நினைத்தமாத்திரமே சகல ஜனங்களும் பாவத்தினின்றும் நீங்குகிறுர்கள். நீ லோக ரக்ஷகனுயிருப்பதனுல் உனக்கு க்ஷேமகரமான வரத்தைக் கேள் என்று திருவாய் மலர்ந்தருளினுர்.

அது கேட்ட இராமர், சுவாமின்! தங்கள் ஸ்ரீபாத தரிசனத்தினும் வேறு விருப்பமில்லை. அதிதீவிர பரிபாகிகள் சிவயோகாதி அதிப்ரயாச சாதன சாத்திய சிவஞானத்தாற் றரிசிக்கப் பெறுகின்ற ஸ்ரீ பாததரிசனம் அடியேன் இப்போது கிடைக்கப்பெற்றேன். எல்லாப்பற்றும் விட்டு அடையத்தக்கது யாதோ அது என்னுல் அடையப்பட்டது. இதனினும் மேலானதில்லையாதலால், இத்தரிசனத்துடன் இத்தலத்திலேயே தங்கள் கைங்கரியஞ் செய்துகொண்டு என்றும் வசித்தற்கே விரும்புகிறேன் என்று கூற, அது கேட்ட சிவபிரான் வாராய்! இராமசந்திரனே! உன் உரிமைத் தம்பி பரதன் உன்னிடத்துள்ள அன்பின் மேலீட்டினுற் கையில் வந்த இராஜபோகத்தை முற்றும் விட்டுப் பூமியாதிமே லாசை சிறிதுமின்றிக் கந்தமூல பலாதிகளையே பசி மாத்திரையிற் புசித்துச்சர்வ சங்கபரித்தியாகஞ்செய்து பக்தி முழுதும் உன்னிடத்திலேயே செலுத்தி வருகின்றுன். இத்துணைச் சிறந்த பரதனை மறந்து நீ இத்தலத்தில் வசிக்க விரும்புவது நியாயமன்று. ஆகையால்

நீ அவனிடஞ்சென்று அவனது அபீஷ்டத்தை நிறைவே ற்றி நீதியுடன் இராஜ்ஜியபரிபாலனஞ்செய்து பிரஜைகளை காக்கவேண்டிய கடனில் நின்று விலகிய பின்பு இங்குவந்து நமது சாமீப்பியம் பெற்றிருந்து இங்குவருகிற பக்தர்களு க்குப் புத்திமுத்திகளைக்கொடுத்துக்கொண்டு வசிப்பாயாக என்று ஆக்ஞாபித்தருளி அந்தர்த்தானமாயினர். உடனே இராமர் மேலும் வணங்கி அத்திருவாக்கைச் சிரமேற் ண்டு விரைந்து சென்று பரதனைக்கண்டு அவன் கருத்தின் படி பட்டாபிஷேகஞ்செய்துகொண்டு அவனை மகிழ்வித்துச் சர்வஜன திருப்திகரராய் இராஜ்ஜிய பரிபாலனஞ்செய்து வந்தார்.

பின்பு, இராமர் மேல் நடக்கவேண்டிய சிவாக்ஞை யை நினைத்து ஒரே காலத்திற் சிதாலக்ஷ்மணருடனே அயோத்தியைவிட்டு நீங்கினால், ஜனங்கள் நம்து பிரிவைச் சகிக்கமாட்டார்களென்றெண்ணி ஒவ்வொரு வியாஜங்கா ட்டிச் சீதாலக்ஷ்மணரை அனுப்பிவிட்டுப் பின் சிலகாலஞ் சென்று பரதர் முதலியோருடன் வைகுண்டயாத்திரை யென்னும் வியாசங்காட்டிச் சரயுநதிக்கரைக்குப்போகும் போது ஜனங்கள் சகியாது கண்ணீருடன் நிற்குங்காலை அநுமார் இராமரை நோக்கி, சுவாமின்! என்னைச் சந்திர சூரியருள்ளவரை இப்பூமியில் தேவரீரைத் தரிசித்து வண ங்கிக்கொண்டிருக்கும்படி பணித்தீர்களே. யான் அவ்வா ணையைக் கடப்பவனல்லனே தங்கள் சரணாரவிந்தத்திற் பெருகும் அருளமுதம் புசித்தே ஜீவித்து வருபவனல்லனோ? அந்தச் சரணாரவிந்தத்தைப் பிரிந்து எப்படி உயிருடனிரு ந்து வாழ்வேன்? இந்நிலைமையிலிருக்கிற என்னைத்

தனியே விடுவது அருளுக்கு அழகாமோ? என்று விண்ணப்பிக்க, அவரை நோக்கி இராமர், அநுமானே! உன் கவலையை விட்டுவிடு. நாம் வைகுண்டயாத்திரை யென்றது வியாஜமே. அதனினும் எத்தனையோ மடங்கு மேலானதாயும் சமஸ்தமான தேவமுனிவ சேவியமாயும் சமஸ்த சிவஸ்தல விசிட்டமாயும் இராவண சங்காரத்திற்கு முன்னும் பின்னும் யான் பூசிக்கப்பெற்றதாயும் யெனக்குப்பேரருள்புரிந்த ஸ்ரீமந் நடேசப்பெருமான் அநவரத சாந்நித்யராய்க் கொலுவீற்றிருந்தருளப் பெருகிறதாயும், எனக்கு அத்யந்தப் பிரீதிகர வாசஸ்தானமாயுமுள்ள தில்லைவளாகமென்னும் ஆதி சிதம்பரக்ஷேத்திரந்தின்கண்ணே இவ்வடிவத்துடன் வசிக்கிறேன். நீ அங்கு வந்து சீதாலக்ஷ்மணருடன் நம்மைத் தரிசித்துக்கொண்டிருப்பாயாக என்று சொல்லிவிட்டு அந்தர்த்தானமாயினர்.

உடனே அநுமார் வருத்தநீங்கிச் சீக்கிரம் அத்தலஞ்சென்று அங்கு முன்னரே வந்து ஸ்ரீமந்நடேசதரிசனாநந்த பரவசராயிருக்கிற ஸ்ரீ ராமரைச் சீதாலக்ஷ்மணருடனே சதா தரிசித்துக்கொண்டிருப்பாராயினர். இப்படியே அங்குவந்து அகஸ்தியாதிமுனிவர்கள் சித்தர்கள் தேவர்கள் நரர்கள் ஸ்ரீமந்நடேசப்பெருமானைத் தரிசித்து பெற்றவரப்பிரசாதங்களனேகமுள. மேற்கூறியபடி இராமர் பூசித்து வரம்பெற்று அநவரதமும் தரிசித்துக்கொண்டிருக்கு மிஃதொன்று கொண்டே இத்தலமான்மிய விரிவையுய்த்துணர்ந்துகொள்க. நாரதனே! சிவராமரிருவர்களுக்கும் அதிமுக்கிய நித்திய சாந்நித்திய அதிப்பிரீதிகர அநவரத வாசஸ்தலமாகிய இத்தில்லைவளாகத்தில் வசித்தலாலுண்டா

கும் பலனை யாவர் சொல்லவல்லார்? இதற்கு நிகரான சிவஸ்தலம் பூமியில் எங்குமே இல்லை. இத்தலத்தில் நடேச சந்நிதியிற் சிவகாமியுண்டாக்கிய சிவதீர்த்தமொன்றும் சீதாதேவியுண்டாக்கிய ஏமபுஷ்கரணி தீர்த்தமொன்றுமுள்ளது. இத்தலத்தில் ஒரு வருஷம் ஒரு அயனம் ஒரு மாதம் ஒரு பக்ஷம். ஒரு வாரமேனும் சிவராம தரிசன நியமத்துடன் வசிப்பவன் யர்வனாயினும் அவன் இகத்திற் சர்வாபீஷ்டங்களும் பெற்றுச் சாயுஜ்யத்தையடைகிறான்' என்று பிரமதேவர் சொல்லி முடித்தாரென்று சூதபுராணிகர் சவுனகாதி முனிவர்களுக்கு உபதேசித்தார்

தில்லைவளாகமான்மியம்.

முற்றுப்பெற்றது.

Chettinadu
Press,
Karaikudi.